**GEMEINDESCHULE**
Rektorat

Gemeinde **HORW**

**முக்கிய குறிப்பு**

மிகவும் மதிப்புள்ள பெற்றோர் மற்றும் வளர்ப்பிற்குப் பொறுப்பானவர்களுக்கு,

**உங்கள் பிள்ளை/உங்கள் பிள்ளைகளின் பாடசாலை வெற்றிக்கு டொச் மொழியை நன்கு தெரிந்திருப்பதும் ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது.** டொச் மொழியை நன்கு தெரிந்திருப்பது, வெற்றியுடன் தொழில் வாழ்வில் நுழைய அல்லது தொடர்ந்து உயர்கல்வியைக் கற்க **ஒரு முக்கிய அடித்தளம்** இடுகின்றது.

பிறமொழிபேசும் பிள்ளைகள் **பாடசாலையில்** விசேட வசதியாக «டொச் இரண்டாவது மொழியாக» (DaZ) எனும் பாடத்தை டொச் மொழியை கற்பதற்கான ஒரு பயன்தரும் உதவியாகப் பெற்றுக்கொள்வார்கள். இருப்பினும் எமக்கு நன்கு தெரிந்த அளவில், **பிள்ளைகள் <u>பாடசாலைக்கு வெளியில்</u> இயலுமானவரை அதிகமாக சுவிஸ்டொச் பிள்ளைகள் அல்லது டொச் மொழிபேசும் பிள்ளைகளுடன் தொடர்பு கொண்டால் மட்டுமே** டொச் மொழியை நன்கு சரளமாகப் பேசமுடியும் என்பதாகும். இதற்கு பிள்ளைகள் பெற்றோரான/வளர்ப்பிற்குப் பொறுப்பானவர்களான உங்களது உதவியிலேயே தங்கியுள்ளனர்! ஆகவே நாங்கள் பரிந்துரைப்பது என்னவென்றால், உங்கள் பிள்ளைகளை.......

... அவர்களது ஓய்வுநேரத்தில் சுவிஸ்டொச்- அல்லது டொச் மொழிபேசும் பிள்ளைகளுடன் அதிகளவில் விளையாட விடுவது (1).
... சுவிஸ்டொச்- அல்லது டொச் மொழிபேசும் பிள்ளைகளின் பராமரிப்பு இல்லங்களுக்கு செல்லுதல் (2).
... மதிய உணவுவேளையில் தங்கியிருந்தால் மற்றும் பராமரிப்பு நிலையத்தில் இருக்கும்போது, முக்கியமாக சுவிஸ்டொச் அல்லது டொச் மொழியைப் பேசிக்கொள்ளச் செய்தல் (3).
... ஓய்வுநேரத்தின்போது உள்ளூர் சுவிஸ் விளையாட்டு- மற்றும் இசைக் கழகங்களில் சேர்ந்து செயற்பட வைத்தல் (4).
... வாசிகசாலையில் டொச் மொழிப் புத்தகங்களை இரவலாகப் பெறுதல் மற்றும் வாசிக்க செய்தல் (5).

நீங்கள் டொச் மொழியிலான படங்களை மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதால், பிள்ளைகள் டொச் மொழியை ஓரளவு திறமையாக விளங்கிக்கொள்ள சந்தர்ப்பம் கிட்டும். இருப்பினும் உங்கள் பிள்ளை டொச் மொழியை நன்றாகக் கதைப்பதற்கோ அல்லது நன்கு தெரிந்துள்ளதற்கோ, படங்களைப் பார்ப்பது மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது மட்டும் போதுமானது அல்ல! மேலே குறிப்பிட்டுள்ள 1-5 வரையான புள்ளிகளைக் கடைப்பிடித்தால் சிறப்பான பலன் கிடைக்கும்.

இதன் நோக்கம் என்னவென்றால் இலகுவான முறையில், சுவிஸ்டொச்சை அல்லது டொச் மொழியை பாலர் பாடசாலையில் சேருவதற்கு முன்பாகக் கற்றுக்கொள்வதாகும். உங்களுக்குப் பிள்ளைகள் இந்த வயதில் இருந்தால், மேலே குறிப்பிட்டுள்ள 1-3வரையான புள்ளிகள் சிறு வயதான பிள்ளைகளுக்கு விசேடமாக மிகவும் முக்கியமானவைகளாக அமையும்.

உங்கள் பிள்ளையின் எதிர்காலத்திற்கான இந்த முக்கிய தகவலை கவனத்தில் எடுத்தமைக்கு மிகவும் நன்றி.

நகரப் பாடசாலை Horw

Tamilisch